## டி.எம்.எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே

# மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

சென்னை, டிச. 6-

டி.எம்.எஸ் - வண்ணாரப்பேட்டை இடையிலான சுரங்கபாதை வழித்தடத்தில் இன்று காலை மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது.

சென்னை டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான 10 கி.மீ சுரங்க வழித்தட பகுதியில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை தொழில் துறை அமைச்சர் எம்.சி. சம்பத் இன்று காலை ஏஜி.டி.எம்.எஸ் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு நேரில் வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், வண்ணாரப்பேட்டை, உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெற்று வரும் இறுதிக்கட்ட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார். பணிகளைத் துரிதமாக முடிக்கும்படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். அப்போது, சோதனை ஓட்டத்திற்குத் தயாராக இருந்த மெட்ரோ இரயிலில் உள்ள வசதிகளையும் பார்வையிட்டார்.



டி.எம்.எஸ்-வண்ணாரப்பேட்டை இடையே சுரங்கப்பாதையில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் இன்று காலை நடந்தது.

இந்த ஆய்வின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பங்கஜ் குமார் பன்சல் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.

இதன் பின்னர் ஏஜி. டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரை மெட்ரோ ரயிலின் சோதனை ஓட்டம் நடைபெற்றது. இந்த சோதனை ஓட்டம் வரும் நாட்களில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

தொடர் சோதனை ஓட்டத்திற்கு பிறகு பாதுகாப்பு ஆணையர் இந்த வழித்தடத்தின் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் மெட்ரோ ரயில் குறித்து ஆய்வு செய்வார். பின்னர், இவரின் ஒப்புதல் கிடைத்த பிறகு இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில்சேவை தொடங்கும். ஏற்கனவே, வரும் ஜனவரி மாதம் முதல் இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.